INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

ஆயுட் காப்புறுதி பற்றி உங்களுக்குத் தெரியுமா?

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

1.

ஆயுட் காப்புறுதி என்றால் என்ன?

ஆயுட் காப்புறுதி என்பது ஒரு நபர் தமது வாழ்கையில் இடம்பெறக்கூடிய ஏதேனும் எதிர்பார்க்க முடியாத இடரிற்கு முகம்கொடுப்பதற்கும் அந்த இடரினை எதிர்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளும் சட்ட ரீதியான ஒப்பந்தமாகும். ஆயுட் காப்புறுதி என்பது நீண்ட கால காப்புறுதி (Long Term Insurance) வகைக்கு உரியதாகும் 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நீண்ட கால காப்புறுதி என்பது "மரணம் அல்லது வாழ்க்கையில் இடம்பெறக்கூடிய ஏதேனும் நிச்சயமற்ற நிகழ்வின் போது பணக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம்" என வரையறுத்துள்ளது. காப்புறுதி பூட்கை உரிமையாளர் இறந்துவிட்டால் அல்லது முழுமையான / பகுதியளவில் அங்கவீனமடைந்தால் அல்லது காப்புறுதி பூட்கை முதிர்ச்சியடைந்தால், காப்புறுதிப் பூட்கையின் நன்மைகளை காப்புறுதி உரிமையாளருக்கு அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு கொடுப்பனவு செய்வதற்கு காப்புறுதி நிறுவனம் உடன்படும்.

பல்வேறுபட்ட விதமான ஆயுட் காப்புறுதி வகைகள் காப்புறுதித்துறையினுள் காணப்படுகின்றதுடன், அதில் சில உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- ஆயுட் காப்புறுதி
- முதலீட்டுடன் கூடிய ஆயுட் காப்புறுதி
- ஆண்டுத்தொகை (வருடம் தோறும் சில தொகையினை கொடுப்பனவு செய்யும்)
- ஊனம், திடீர் இடர் மற்றும் நோய் என்பவற்றுக்கான காப்புறுதி
- ஓய்வூதிய காப்புறுதிப்பூட்கை

2.

ஆயுட் காப்புறுதியின் தேவை

- வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மையை விளங்கிக்கொண்டு, அவசரமான வேளைகளில் அவரின் குடும்பத்தின் தங்கி வாழ்பவர்களின் நிதித் தேவைக்காக நிதியை வழங்குவதற்கு இயலுமாதல், சுயமாக வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு இயலுமாதல், ஏனைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலுமாதல் போன்றவை ஆயுட் காப்புறுதியினால் பெறக்கூடிய நன்மைகளாகும்.
- குடும்பத்தில் பிள்ளைகளின் உயர் கல்வி நடவடிக்கைகளை சிரமமின்றி கொண்டு செல்வதற்கு, அதற்குப் பொருத்தமான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக நிறைவேற்ற முடியும்.
- காப்புறுதியின் தேவை அதிகமாக உணரப்படுவது, ஓய்வூதியம் அல்லது ஏனைய சேம இலாப நிதியத்தின் கொடுப்பனவுகளின்றி ஓய்வு பெறும் நபரினாலாகும். பொருத்தமான ஓய்வூதிய காப்புறுதிப் பூட்கையொன்றினைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக அவர்கள் நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- கடுமையான நோயினால் அல்லது திடீர் விபத்தின் காரணமாக உழைக்க முடியாத சந்தர்ப்பம் இல்லாது போகையில் தம்மிடம் மேலதிக வருமான மூலமொன்று இருக்கின்றது எனும் நம்பிக்கையை வழங்கக் கூடிய வகையில் அமைந்திருப்பது ஆயுட் காப்புறுதியினால் நீங்கள் பெறக்கூடிய இன்னுமொரு நன்மையாகும்.

3.

தனக்கு பொருத்தமான ஆயுட் காப்புறுதியொன்றினை தேர்ந்தெடுப்பதின் முக்கியத்துவம்.

காப்புறுதியொன்றினைத் தேர்ந்தெடுக்கும் போது அவரின் தேவைக்கு பொருத்தமான காப்புறுதியைக் கொள்வனவு செய்தல் வேண்டும். எவரேனுமொருவருடைய வற்புறுத்தலின் கீழ் காப்புறுதிப்பூட்கையைக் கொள்வனவு செய்தல் கூடாது. தனது தேவைக்கு அமைவாகவும், தவணைக் கட்டணம் தொடர்பாக விளங்கிக்கொண்டும் பொருத்தமான காப்புறுதிப் பூட்கையைக் கொள்வனவு செய்வதன் ஊடாக தான் எதிர்பார்க்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அடுத்த முக்கியமான விடயம் என்னவெனில், தன்னால் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யக்கூடிய தொகைக்கு காப்புறுதியைக் கொள்வனவு செய்வதாகும். ஒப்பந்தத்தின் பிரகாரம் தவணைக் கட்டணத்தை செலுத்த முடியாது போனால் காப்புறுதி இரத்துசெய்யப்படும். அதன் மூலம் தான் எதிர்பார்க்கும் நன்மையையோ அல்லது முதலீடு செய்த தொகையையோ மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இயலாது போகும். தனது வயது, பொருளாதார நிலைமை, நிகழக்கூடிய இடர் மற்றும் தன்னுடைய உடல் நலன் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமான காப்புறுதிப் பூட்கையைத் தேர்வுசெய்தல் வேண்டும்.

> **“பொருத்தமான காப்புறுதியைக் கொள்வனவு செய்வதன் ஊடாக தான் எதிர்பார்க்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.”**

தான் பெற்றுக்கொள்ளும் பிரதான காப்புறுதிக்கு மேலதிகமான காப்பீட்டினையும் பெற்றுக்கொள்ள முடியும். இதன் போது ஆரம்ப தவணைக் கட்டணத்திற்கு மேலதிகமாக மேலதிக காப்பீட்டுக்கு உரிய தவணைக் கட்டணத்தையும் நீங்கள் செலுத்த வேண்டும்.

உங்களுக்கு இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பின், பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம் அல்லது பதிவுசெய்த தரகர் நிறுவனத்திடம் அல்லது அங்கு சேவைபுரியும் உரிய அலுவலரிடம் அல்லது காப்புறுதி முகவரின் ஊடாக தேவையான தெளிவுபடுத்தலைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனூடாக உங்கள் தேவைக்கு மிகப் பொருத்தமான காப்புறுதிப் பூட்கையைக் கொள்வனவு செய்ய முடியும்.

4.

காப்பறுதிப் பூட்கையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதில் உள்ள விடயங்களை விளங்கிக் கொள்ளல்.

- காப்புறுதிப் பத்திரமென்பது, காப்புறுதி நிறுவனம் மற்றும் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் காப்புறுதிதாரர் என்பவர்களுக்கிடையில் உருவாக்கப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தமாகும். காப்புறுதியொன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது காப்புறுதிப் பத்திரத்தில் உள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக தெளிவான விளக்கத்தினைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும். காப்புறுதிக் காப்பீட்டுக்கான அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் காப்புறுதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. காப்புறுதி உரிமைகள் கிடைக்கப்பெறுவது இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவாகும்.

- அதனால், காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "கோரிக்கைக்கான உரிமைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பம்" பற்றி விசாரித்து தெரிந்துகொள்ளல் மற்றும் விளக்கத்தைப் பெற்றிருத்தல் மிக முக்கியமானதாகும்.

- சில காப்புறுதிப்பூட்கைத் தொகை முதல் மூன்று ஆண்டுகளுக்குள் எவ்வித நிதித் தொகையையும் பெற்றுக்கொள்ள முடியாது, அதேபோல் அந்தக் காலத்தினுள் காப்புறுதி முடிவுறுத்தப்பட்டால் உங்களுக்கு எவ்வித தொகையும் கிடைக்கமாட்டாது. அதனால் உங்களுடைய கொடுப்பனவுத் திறனுக்கு ஏற்ற வகையில் காப்புறுதித் தவணைக் கட்டணத்தைத் தீர்மானியுங்கள். முதிர்ச்சியடைவதற்கு முன்னர் காப்புறுதிப் பூட்கையினை முடிவுறுத்தினால், அதன் உச்ச நன்மை உங்களுக்கு கிடைக்காது போகும்.

> "காப்புறுதிப் பத்திரமென்பது, காப்புறுதி நிறுவனம் மற்றும் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் காப்புறுதிதாரர் என்பவர்களுக்கிடையில் உருவாக்கப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தமாகும்."

- அண்மையில் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அனைத்து காப்புறுதிப் பத்திரமும் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) இருத்தல் வேண்டுமென்பதுடன், பத்திர உரிமையாளருக்கு விருப்பமான மொழியில் காப்புறுதி ஆவணத்தை உரிய காப்புறுதி நிறுவனம் வழங்குதல் வேண்டும். அதனால் காப்புறுதிப் பத்திர உரிமையாளர் தான் பெற்றுக்கொண்ட காப்புறுதிப் பூட்கை தொடர்பாக சிறந்த தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5. காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் போது அவசியமான அனைத்து உண்மையான தகவல்களையும் காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்காத போது ஏற்படும் தாக்கங்கள்

உங்களால் முன்மொழிவுப் பத்திரத்தில் (Proposal Form) முழுமையான மற்றும் சரியான தகவல்கள் வழங்கப்படாவிடின், உங்கள் கோரிக்கையை நிராகரிப்பதற்கு காப்புறுதி நிறுவனத்தினால் இயலுமாகும். அவ்வாறான நிலமையை தவிர்த்துக்கொள்வதற்காக முழுமையான மற்றும் சரியான தகவல்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். எந்தவொரு தகவலினதும் தேவை தொடர்பாக சந்தேகம் இருப்பின் அதனைத் தெளிவுபடுத்திக்கொள்ளல் அல்லது அது தொடர்பாக எழுத்து மூலம் காப்புறுதி நிறுவனத்திடம் கோருதல் வேண்டும். உரிய முன்மொழிவுப் பத்திரம், உங்களுக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான ஒப்பந்தமாகும். உங்களினால் அந்த முன்மொழிவுப் படிவம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பூரணப்படுத்தப்படாத முன்மொழிவுப் பத்திரத்தில் (வெற்று முன்மொழிவுப் படிவத்தில்) கையொப்பமிடுதல் கூடாது. எனினும், மூன்றாம் தரப்பினர் உங்களின் சார்பாக படிவத்தைப் பூர்த்தி செய்திருப்பின், வழங்கப்பட்டுள்ள பதில்கள் முழுமையானவை மற்றும் சரியானவை என்பதை உறுதிப்படுத்திய பின்னர் கையொப்பமிடுதல் முக்கியமானதாகும். நீங்கள் கையொப்பமிட்டதன் பின்னர் வேறொரு நபர் அதனைப் பூர்த்தி செய்திருப்பினும், அதில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்துக்குமான முழுப் பொறுப்பு உங்களுடையதாகும்.

> **“எந்தவொரு தகவலினதும் தேவை தொடர்பாக சந்தேகம் இருப்பின் அதனைத் தெளிவுபடுத்திக்கொள்ளல் அல்லது அது தொடர்பாக எழுத்து மூலம் காப்புறுதி நிறுவனத்திடம் கோருதல் வேண்டும்.”**

உங்களினால் காப்புறுதி இடருக்குரிய விடயங்கள் அனைத்தும் முன்மொழிவுப் படிவத்தில் சுயமாக உட்படுத்தப்படுதல் வேண்டும். விசேடமாக காப்புறுதி ஒப்பந்தமென்பது முழுமையான நம்பிக்கையுடன் நடந்துகொள்ளல் (Utmost Good faith) எனும் அடிப்படையிலான ஒப்பந்தமாகும். காப்புறுதி கோரப்படும் முன்மொழிவில் உண்மையான தகவல்கள் உட்படுத்தப்படாமை அல்லது பிழையான தகவல்களை வழங்குதல் அந்த காப்புறுதிப் பத்திரத்தை பெறுமதியற்றதாக்குவதற்கு அல்லது இரத்துசெய்வதற்கு காரணமாக அமையும்.

6.

காப்புறுதி தவணைக் கட்டணத்தை இடையில் நிறுத்துவதனால் ஏற்படும் தாக்கம்

ஆயுட் காப்புறுதிப்பத்திரம் தொடர்பாக, காப்புறுதி உரிமையாளர் கையில் கிடைத்து 21 நாட்களினுள் அது தொடர்பாக மீண்டும் சிந்தித்துப் பார்க்க முடியும். அதற்கமைவாக, தொடர்ச்சியாக பேணுவதா அல்லது நிறுத்தி விடுவதா எனும் தீர்மானத்தை மேற்கொள்ள முடியம். நீங்கள் அந்தக் காலத்தினுள் காப்புறுதிப் பத்திரத்தை இரத்துசெய்வதை மாற்றீடாக தேர்ந்தெடுத்தால், காப்புறுதி நிறுவனத்தினால் அது தொடர்பாக மேற்கொண்ட செலவுகளின் கீழ் அந்த தவணைக் கட்டணம் உங்களுக்கு செலுத்தப்படும்.

அதேபோல் மூன்று வருடம் தொடர்ச்சியாக பணம் செலுத்தியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது ஒப்பந்தத்தில் சாட்டப்பட்டுள்ள தொகையைப் பெற்றுக்கொள்ளும் காலம் மூன்று வருடத்திற்கு குறைவாயின், அதற்காக தவணைக் கட்டணம் செலுத்தியுள்ள சந்தர்ப்பத்தில் உங்களின் காப்புறுதிப் பத்திரத்தை இரத்து செய்ய நீங்கள் தீர்மானித்தால், அந்த காப்புறுதி நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்மானத்தை மேற்கொள்ள முடியும். அதன்போது உங்கள் காப்புறுதியின் பெறுமதி எனப்படும் சாட்டப்பட்ட தொகையைக் குறிக்கும். இந்த சாட்டப்பட்ட தொகை காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈட்டு கணிப்பீட்டாளரினால் கணிப்பீடு செய்யப்பட்டு சான்றுபடுத்தப்படும். **உங்கள் காப்புறுதிப் பத்திரத்தின் சாட்டப்படும் தொகை மற்றும் அது தொடர்பான ஏற்பாடுகளை விளங்கிக்கொள்ளல் முக்கியமானதாகும்.** உரிய காப்புறுதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் இந்த ஏற்பாடுகள் தொடர்பாக உங்கள் காப்புறுதி நிறுவனம், தரகர் நிறுவனம் அல்லது முகவரிடம் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய தினத்தில் காப்பறுதி தவணைக் கட்டணத்தை செலுத்துவதன் முக்கியத்துவம்

7.

காப்புறுதி பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் இருக்கும் முக்கிய அங்கமாக இருப்பது முழுமையான நம்பிக்கையில் கட்டியெழுப்பப்பட்ட சட்ட ரீதியான ஒப்பந்தத்திற்கு காப்புறுதி தவணைக் கட்டணத்தை உரிய திகதியில் தடையின்றிச் செலுத்துதல் மற்றும் அவசியமான காப்பீடுகளை உரிய வகையில் வழங்குதல் ஆகும். இதன் போது காப்புறுதித் தவணைக் கட்டணத்தை உரிய திகதியில் செலுத்துதல் மிக முக்கியமானதாவதுடன், அவ்வாறு செலுத்தத் தவறின் காப்புறுதிக் கோரிக்கை நிராகரிக்கப்படலாம். காப்புறுதித் தவணைக் கட்டணத்தை நேரடியாக உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்த முடியும். தற்போது காப்புறுதி நிறுவனங்கள் நுகர்வோரின் வசதி கருதி டிஜிடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி காப்புறுதித் தவணைக் கட்டணத்தை பல்வேறுபட்ட முறைகளின் ஊடாக செலுத்துவதற்கு வசதியளித்துள்ளன. காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் போது தவணைக் கட்டணங்களை செலுத்தக்கூடிய முறை பற்றி உரிய காப்புறுதி நிறுவனத்திடம் அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து அறிந்துகொள்வதற்கு முயலுங்கள். அதேபோல், காப்புறுதிக் கட்டுப்பணம்/ கொடுப்பனவு செய்தது தொடர்பான அனைத்து பற்றுச்சீட்டுகளையும் வைத்துக்கொள்ளுதல் முக்கியமானதாகும்.

> **“இதன் போது காப்புறுதித் தவணைக் கட்டணத்தை உரிய திகதியில் செலுத்துதல் மிக முக்கியமானதாவதுடன், அவ்வாறு செலுத்தத் தவறின் காப்புறுதிக் கோரிக்கை நிராகரிக்கப்படலாம்.”**

8.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் முறை

காப்புறுதி தொடர்பான முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் காப்புறுதிதாரரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன், அதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினைச் சமர்ப்பியுங்கள். காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு https://ircsl.gov.lk/list-of-insurance-companies/ எனும் இணைய முகவரியில் உள் நுழையுங்கள். நிறுவனம் நியாயமான காலப்பகுதியினுள் அதனைத் தீர்த்து, அது தொடர்பான பதிலை வழங்குதல் வேண்டும்.

உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் நியாயமான காலப்பகுதியினுள் பதில் கிடைக்காவிடில் அல்லது முறைப்பாடு தீர்க்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிடில், உங்கள் முறைப்பாட்டினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு சமர்ப்பிக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் முறைதொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://ircsl.gov.lk/policyholder-complaints/ எனும் இணைய முகவரியில் நுழையவும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக காப்புறுதிப்பூட்கையொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் பொதுவான தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காப்புறுதி பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடுசெய்ய அல்லது இரத்துசெய்யமாட்டது. காப்புறுதிப் பத்திரம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம், காப்புறுதி தரகர் நிறுவனம் அல்லது காப்புறுதி முகவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி - 0112 2396184-9 | பக்ஸ் - 0112 2396190
மின்னஞ்சல் - mder@ircsl.gov.lk

www.ircsl.gov.lk

https://www.facebook.com/Ircslofficialpage/

https://www.linkedin.com/in/insurance-regulatory-commision-of-sri-lanka-980722209/

https://www.youtube.com/channel/UCuM9RLGQTi7B2MM7PL7jfiA

பொறுப்பு மற்றும் துறப்பு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த கைநூல் அச்சிடப்பட்டுள்ளதுடன், எந்தவிதமான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பதிலீடாக இதனைப் பயன்படுத்துதல் கூடாது.